நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம்

- *வெஸ்டர்ன் யூனியன்*

Classification: Public

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – வெஸ்டர்ன் யூனியன் உப முகவர் தொழிற்பாடுகள்

விளைபொருள் / சேவை	எவையேனும் ஊக்கத் தொகைகள் மற்றும் மேம்பாடுகள் உட்பட நிதிசார் மற்றும் வேறு நன்மைகள்	கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை,முக்கிய ஆபத்துக்கள்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
வெஸ்டர்ன் யூனியன்	வெஸ்டர்ன் யூனியன் அனுப்பீடுகளின் பயனுகரிகள் தமது அனுப்பீடுகளை NDB உப முகவர் நிலையங்கள் எவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுவர்	பயனுகரிகள் தமது வெஸ்டர்ன் யூனியன் அனுப்பீடுகளை NDB உப முகவர் நிலையங்களில் பெற்றுக்கொள்ளும் போது எந்தவித தரகுப் பணம் அல்லது கட்டணங்களைச் செலுத்துவதற்கு தேவையில்லை	1. வாடிக்கையாளர் அனுப்புனரினால் அறிவிக்கப்படும் செல்லுபடியான MTCN ஐ (பணப் பரிமாற்ற கட்டுப்பாட்டு இலக்கம்) சமர்ப்பித்தல் வேண்டும். 2. வாடிக்கையாளர் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். (தேசிய அடையாள அட்டை/சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச்சீட்டு) 3. பயனுகரி இலங்கையராக இல்லாவிடின், செல்லுபடியான வீசா சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் 4. வாடிக்கையயாளர் ‘‘பணம் பெறுவதற்கான படிவத்தை’’ பூரணப்படுத்துதல் வேண்டும் (உப முகவரினால் தேவைப்படுத்தப்படின் மட்டும்) 5. கொடுக்கல்வாங்கல் செல்லுபடியானதாகவும் வாடிக்கையாளரினால் கொடுத்துதவப்பட்ட விபரங்கள் வெஸ்டர்ன் யூனியன் முறைமையில் காணப்படும் விபரங்களுடன் ஒத்ததாகவும் இருப்பின், வாடிக்கையாளருக்கு அனுப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் 6 NDB வெஸ்டர்ன் யூனியன் உப முகவர், பணத்துடன் சேர்த்து வாடிக்கையாளருக்கு கையளிப்பதற்கு (பணம் பெறுவதற்கான படிவம்) அனுப்பீட்டு முறைமையினால் தோற்றுவிக்கப்படும் கொடுப்பனவு பற்றுச்சீட்டொன்றை வழங்குவார். **முக்கிய ஆபத்துக்கள்** 1. ஆளடையாளத் திருட்டு அல்லது மோசடிகள் போன்ற மோசடியான கொடுக்கல்வாங்கல்கள் 2. கொடுப்பனவுகளைச் செய்முறைப்படுத்தும் போதான தொழிற்பாட்டுசார் பிழைகள் 3. ஏற்கனவே உள்ள AML கொள்கைகளுடன் ஒழுங்குபடுத்தும் இணங்கியொழுகுகைகள்	1. சேவை தனிநபர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் 2. வசதியானது NDB உப முகவரின் விருப்பப்படி கிடைக்கக்கூடியதாகவிருக்கும் 3. வெஸ்டர்ன் யூனியன் அனுப்பீடு வெஸ்டர்ன் யூனியனினால் விதிக்கப்படும் எல்லா நியதி நிபந்தனைகளுக்கும் அமைந்ததாகவிருக்கும். 4. பயனுகரி செல்லுபடியான ஆளடையாள ஆவணத்தை அல்லது செல்லுபடியான வீசாவை சமர்ப்பிப்பதற்கு இயலாதவராகவிருப்பின் ஏதேனும் அனுப்பீட்டை மறுப்பதற்கான உரிமையை உப முகவர் கொண்டிருக்கின்றார். 5. ஏதேனும் சந்தேகத்திற்கிடமான தன்மையிலான கொடுக்கல்வாங்கல் NDB உப முகவரினால் மறுக்கப்படமுடியும். 6. பகுதியளவிலான கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படாத காரணத்தினால், வாடிக்கையாளரினால் செய்யப்படும் கொடுப்பனவுக் கோரிக்கை உப முகவர் நிலையத்தில் பணம் இல்லாமை காரணமாக NDB உப முகவரினால் மறுக்கப்படமுடியும். 7. எவையேனும் பிணக்குகள் +94112 4488888 என்ற இலக்கத்தினூடாக NDB இன் 24 மணி நேர அழைப்பு மையத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

			4. தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக சேவை இடையூறுகள் 5. வாடிக்கையாளர் பிணக்குகள்	

உமது பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

எமது சேவைகளை எல்லா நேரங்களிலும் நீங்கள் திருப்திப்படும் வகையில் வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
உமது எதிர்பார்ப்புக்களை நாம் எவ்வளவு சிறப்பாக பூர்த்தி செய்கின்றோம் என்பதை அறியவும் அவசியமாகின்றவிடத்து சீராக்கல்களைச் செய்வதற்கும் உமது பின்னூட்டம் எமக்கு உதவிபுரியும்.

உமது பின்னூட்டங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது:

0743648272 (ishani.lenora@ndbbank.com) என்ற இலக்கத்தினூடாக NDB வங்கியின் அனுப்பீடுகள் தலைவரைத் தொடர்புகொள்ளவும் அல்லது +94 (0) 11 2448888 (contact@ndbbank.com) என்ற இலக்கத்தினூடாக 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளவும்.

முகாமையாளர், வாடிக்கையாளர் தொடர்பு முகாமை, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ, இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு எழுதவும்.

நாம் எவ்வாறு பதிலளிப்போம்:

முறைப்பாடொன்றைப் பெறுவதன் மேல், வங்கியின் முறைப்பாட்டைக் கண்காணிக்கும் முறைமையில் பதிவுசெய்து அது பற்றிய விடயத்தை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வோம். எம்மால் அவ்வாறு செய்ய இயலாமலிருக்கின்ற பட்சத்தில், மூன்று வேலை நாட்களினுள் தீர்வொன்றை நாம் உமக்கு வழங்குவோம். முறைப்பாட்டின் தன்மை காரணமாக, இக்காலப் பிரிவினுள் எம்மால் தீர்க்க முடியாவிடின், உத்தேச பதிலளிப்பு நேரமொன்றை நாம் உமக்குத் தெரிவிப்போம்.
உமது கரிசனைக்கான எமது பதிலில் நீங்கள் முழுமையாகத் திருப்தியுறாத பட்சத்தில், இலங்கை நிதி குறைகேள் அதிகாரி அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

திரு. ஆனந்த குமாரதாச
நிதி குறைகேள் அதிகாரி
நிதி குறைகேள் அதிகாரி அலுவலகம்

Classification: Public

143ஏ, வஜிர வீதி
கொழும்பு 05
தொடர்பிலக்கம்: +94 11 259 5624
தொலைநகல்: +94 11 259 5625
மின்னஞ்சல்: fosril@sltnet.lk
இணையத்தளம்: www.financialombudsman.lk

Classification: **Public**